முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1132

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.11.2022, வெள்ளிக்கிழமை

1. ஓங்கார மகா சூட்சும ராஜனே
ஓங்கார சக்திமிகு ஆறுமுக அரங்கனே
ஓங்காரன் உந்தனுக்கும் இனிதே ஞான அறிவுரை ஆசி
ஓதிடுவேன் சுபகிருது துலை திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 18 ம் நாள் 04.11.2022 வெள்ளிக்கிழமை)
2. தன்னிலே அரங்கனின் பலம் கொண்டே
தரணியில் அற்புதத்தை யான் நடத்துவேன்
அண்ணலாக அரங்கன் தருகின்ற அறம் மூலம்
அகிலமே தர்மலோகம் ஆகி
3. ஆகியே அரங்கனால் புதுமையும்
ஆற்றல்மிக்க உலகோர்க்கு அழியாமையும்
வரமென சடுதி இனிதே கிட்டி
வல்லமைபட உலகம் ஞானலோகமாகும்
4. ஆகவே அரங்கனைக் கண்டு அகிலத்தார்
ஆசி தீட்சை அடைவதோடு அறத்திலும் பொருளுதவி செய்து
அரங்கா முருகா என ஜெபதபம் போற்ற
அனைவருக்கும் அழியாமை இலகுவாகக்கிட்டும்
5. ஆகவே அன்னதான சேவையோடு
அன்பர்கள் ஞானவழி தொடர்ந்துகொண்டு
சன்மார்கக நெறி பிறழா
அருளுவேன் அரங்கன் திருவடி பற்றிவர
6. உலகோர்க்கு ஞானசித்தி என்கின்ற
உயர் சித்தி இலகுவாகக் கிட்டி
மண்ணுலகோர் ஞானிகளாக மகத்துவம் பெற்று
உலகமாற்றத்தை நிகழ்த்தி பெரும்பேரு காண்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–